தினமணி

தமிழகத்தில் 11 லட்சம் டன் நெல் கொள்முதல்

First Published : 17 Feb 2012 03:01:25 AM IST



உணவுத் துறையின் செயல்பாடுகள் குறித்து, தலைமைச் செயலகத்தில் வியாழக்கிழமை ஆலோசனை நடத்திய அத்துறை அமைச்சர் ஆர்.காமராஜ். உடன், துறையின் செயலாளர் எம்.பி.நி

சென்னை, பிப். 16: தமிழகத்தில் நடப்பாண்டில் இதுவரை 11.09 லட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு இருப்பதாக உணவுத் துறை அமைச்சர் ஆர்.காமராஜ் தெரிவித்தார்.

பொது விநியோகத் திட்டம், நெல் கொள்முதல் ஆகியவற்றின் செயல்பாடுகள் குறித்து தலைமைச் செயலகத்தில் வியாழக்கிழமை அவருடைய தலைமையில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் அமைச்சர் காமராஜ் பேசியது:

மேட்டூர் அணையில் இருந்து பாசனத்துக்காக முன்கூட்டியே தண்ணீர் திறந்து விடப்பட்டதால் கடந்த 10 ஆண்டுகளில் இல்லாத சாதனையாக நடப்பு கொள்முதல் பருவத்தில் 1,451 நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு, இதுவரை 11.09 லட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

வரும் செப்டம்பருடன் முடிவடையும் கொள்முதல் பருவத்தில் 26 லட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. குறுவை பருவத்தில் மட்டும் 5.24 லட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டது.

விவசாயிகளுக்கு முதல்வரின் ஊக்கத் தொகையாக சன்னரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.70-ம் சாதாரண நெல்லுக்கு ரூ.50-ம் வழங்க உத்தரவிட்டதால் கொள்முதல் செய்யப்பட்டுள்ள நெல்லுக்கு ரூ.67.84 கோடி ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

கடத்தல் தடுப்பு: குடிமைப் பொருள் கடத்தல் தடுப்பு காவல் துறை அலுவலர்களின் தொடர் நடவடிக்கையினால் 149 நபர்கள் தடுப்புக் காவல் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு கடத்தல் நடவடிக்கைகள் கட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டு டிசம்பர் 31-ம் தேதியில் புழக்கத்தில் உள்ள ஒரு கோடியே 97 லட்சத்து 70 ஆயிரத்து 682 ரேஷன் அட்டைகளை மேலும் ஓராண்டுக்குப் புதுப்பிக்கும் பணி ஜனவரி 1-ம் தேதி முதல் நடைபெற்று வருகிறது.

கடந்த 12-ம் தேதியுடன் முடிவடைந்த காலத்தில் ஒரு கோடியே 77 லட்சத்து 18 ஆயிரத்து 574 ரேஷன் அட்டைகள் புதுப்பிக்கப்பட்டுள்ளன. வரும் 28-ம் தேதி வரை இந்தப் பணிகள் நடைபெறும். தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனத்தில் அத்தியாவசியப் பொருட்கள் இருப்பு வைப்பதற்காக, 6.42 லட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவு உள்ள கிடங்குகள் தற்போது உள்ளன. இந்த கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக மதுராந்தகம், சின்னசேலம், கோவில்பட்டி, காரைக்குடி, அருப்புக்கோட்டை ஆகிய ஐந்து இடங்களில் 45 ஆயிரம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட ஒன்பது கிடங்குகள் கட்டப்படும்.

ரேஷன் கடைகளில் அரிசியின் தரம் குறைந்து காணப்பட்டால் அந்த அரிசியை அங்காடியிலிருந்து திரும்ப எடுத்துக் கொண்டு கிடங்கிலிருந்து நல்ல தரமான அரிசியைக் கொடுத்து விநியோகம் சீரான முறையில் நடைபெறுவதை உறுதி செய்ய வேண்டும் என்றார் அமைச்சர்.

இந்தக் கூட்டத்தில் உணவு, கூட்டுறவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை செயலாளர் எம்.பி. நிர்மலா, உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை ஆணையர் பெ.மு.பஷீர் அகமது, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக நிர்வாக இயக்குநர் தா. கார்த்திகேயன் உள்ளிட்ட பலரும் பங்கேற்றனர்.

## பிப். 19-ல் அரிமா சங்க நிர்வாகிகள் கூட்டம்

First Published : 16 Feb 2012 02:33:08 PM IST

அரியலூர், பிப். 16:  அரியலூரில், பன்னாட்டு அரிமா சங்க நிர்வாகிகளின் சந்திப்பு கூட்டம் வரும் 19-ம் தேதி காலை 9 மணிக்கு நடைபெறுகிறது.
அரிமா மண்டலத் தலைவர் தனபால் தலைமை வகிக்கிறார். லயன்ஸ் சங்க மாவட்ட ஆளுநர் ராமராஜு, மண்டல சந்திப்பை தொடக்கி வைக்கிறார். சிறப்பு விருந்தினராக நாஞ்சில் சம்பத் பங்கேற்று பேசுகிறார்.
மாவட்ட முதல் துணை ஆளுநர் முருகேசன், மாவட்ட இரண்டாம் துணை ஆளுநர் சண்முகவேல், மாவட்ட அவைச் செயலர் காசி. பாலசுப்பிரமணியன், மாவட்ட அவை பொருளாளர் கலியபெருமாள் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.
இதில், முன்னாள் மாவட்ட ஆளுநர்கள் அடைக்கலவன், கண்ணன், முகம்மது ரபி, பெரம்பலூர் சாசனத் தலைவர் மு. ராஜாராம், வட்டாரத் தலைவர்கள் பி. ராசேந்திரன், என். ராசேந்திரன், பொருளாளர்கள் காமராஜ், நீலமேகம் உள்ளிட்ட பலர் கலந்து கொள்கின்றனர்.

## "புவி வெப்பமயமாதலைத் தடுக்க மரம் வளர்ப்பது அவசியம்'

First Published : 16 Feb 2012 02:54:44 PM IST

திருத்துறைப்பூண்டி, பிப். 15: புவிவெப்பமயமாதலைத் தடுக்கவும், சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கும் மரக்கன்றுளை நடுவது அவசியம் என்றார் ஓ.என்.ஜி.சி. சென்னை பொது மேலாளர் டாக்டர் ஜோஸ்யுலு.
திருத்துறைப்பூண்டி அருகே உள்ள மேட்டுப்பாளையம் கிராமத்தில் ஓ.என்.ஜி.சி. கிராமப்புற முன்னேற்ற திட்டத்தின் கீழ் காந்தி அமைதி மையத்துடன் இணைந்து மகளிர் சுய உதவிக் குழுவினருக்கு 5 ஆயிரம் மரக்கன்றுகளை வழங்கி அவர் மேலும் பேசியது:
சுற்றுச்சூழல் மாசுபடுவதற்கு காரணம் மரங்களை நடுவதைக் காட்டிலும், அதிகமாக வெட்டுவதுதான். ஒரு மரத்தை வெட்டும் போது இரண்டு மரக்கன்றுகளை நட வேண்டும். இதுபோன்ற மரம் வளர்ப்புத் திட்டங்களை மாணவர்கள், மகளிரிடையே ஊக்கப்படுத்தி அதிக அளவில் மரங்களை நட்டு சுற்றுச்சூழலைப் பாதுகாக்க அனைவரும் சமூக அக்கறையுடன் செயல்பட வேண்டும்.
இங்கு வழங்கப்பட்ட மரக்கன்றுகளை முறையாக வளர்த்து, ஆளாக்கும் சிறந்த ஊராட்சிக்கு மேலும் உதவி செய்ய தயாராக இருக்கிறோம் என்றார் அவர்.
நிகழ்ச்சியில் மகளிர் சுய உதவிக் குழுவினருக்கு மகோகனி, ரோஸ்உட், சில்வர்ஊக், தேக்கு, குமிழ்தேக்கு போன்ற உயர்வகை மரக்கன்றுகளும், பழமரக்கன்றுகளும் வழங்கப்பட்டன.

நிகழ்ச்சியில் ஓ.என்.ஜி.சி. சென்னை துணைப் பொது மேலாளர் மணி, டாக்டர் கிரிதர் (காரைக்கால்), ராஜா, பிரபாகரன் (செனனை), முதன்மை மேலாளர் அய்யாத்துரை, வெங்கட்ராமன், மேட்டுப்பாளையம் ஊராட்சித் தலைவர் பரமசிவம், ஒன்றியக் குழு உறுப்பினர் ஞானசவுந்தரி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை காந்தி அமைதி மையத் தலைவர் சிவா. சண்முகவடிவேலு செய்திருந்தார்.

**காலிங்கராயன் கால்வாயில் உடைப்பு: 120 ஏக்கர் பயிர்கள் சேதம்**

First Published : 17 Feb 2012 04:18:40 AM IST



உடைப்பு ஏற்பட்டு விளைநிலங்களில் கடல்போல சூழ்ந்து நிற்கும் நீர்.

ஈரோடு, பிப். 16: ஈரோடு காலிங்கராயன் கால்வாயில் கரையில் உடைப்பு ஏற்பட்டதால் 120 ஏக்கர் பயிர்கள் சேதம் அடைந்துள்ளன.

ஈரோட்டின் பழமையைப் பறைசாற்றும் சின்னங்களில் ஒன்று காலிங்கராயன் கால்வாய். 731 ஆண்டுகளுக்கு முன்பு இப்பகுதியை ஆண்ட குறுநில மன்னர் காலிங்கராயனால் கட்டப்பட்டது இந்த வாய்க்கால்.

இந்த வாய்க்கால் 90 கி.மீ. நீளம் கொண்டது. இதில் 786 மதகுகள், 72 பாலங்கள், 270-க்கும் மேற்பட்ட வளைவுகள் உள்ளன. ஆண்டுக்கு 10 மாதங்கள் இந்த வாய்க்காலில் நீர்வரத்து இருக்கும். இதன் மூலம் சுமார் 22,500 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன.

நெல், கரும்பு, மஞ்சள் ஆகிய பயிர்கள் பிரதானமாக பயிரிடப்பட்டுள்ளன. காலிங்கராயன் அணைக்கட்டில் இருந்து 7-வது மைல் 4-வது பர்லாங்கில் அக்ரஹாரம் பகுதியில் உள்ள வாய்க்கால் கரையில் 30 அடி அகலத்துக்கு வியாழக்கிழமை அதிகாலையில் உடைப்பு ஏற்பட்டது. இங்கிருந்து வெளியேறிய நீர், அருகில் இருந்த நெல், கரும்பு தோட்டத்துக்குள் சென்றது.

தகவல் அறிந்த கீழ்பவானி வடிநில கோட்டச் செயற்பொறியாளர் ஆர்.பி.பிரகலாதன் தலைமையிலான பொதுப்பணித்துறை அதிகாரிகள் சம்பவ இடத்துக்குச் சென்று உடைப்பைச்

சரிசெய்யும் பணியில் ஈடுபட்டனர். காலிங்கராயன் அணைக் கட்டில் மதகுகள் அடைக்கப்பட்டு கால்வாயில் தண்ணீர் வரத்து நிறுத்தப்பட்டது.

இது குறித்து பாதிக்கப்பட்ட விவசாயி ராசு (எ) ஆர்.சண்முகசுந்தரம் கூறியது: சம்பந்தப்பட்ட பகுதியில் உடைப்பு ஏற்படும் வாய்ப்பு உள்ளது என பொதுப்பணித்துறை அதிகாரிகளுக்கு கடந்த 10 நாள்களுக்கு முன்பாக தகவல் கொடுத்தேன்.

அதிகாரிகள் வந்து சென்றனர். உரிய நடவடிக்கை எடுக்காததால் இப்போது உடைப்பு ஏற்பட்டுள்ளது. உடைப்பு ஏற்பட்டதால் சிறு, குறு விவசாயிகள் சுமார் 70 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அதிகமாக 90 ஏக்கரில் நெல் பயிர்கள் சேதமடைந்துள்ளன.

மேலும் கரும்பு, மஞ்சள் பயிர்கள் சுமார் 30 ஏக்கர் வரை சேதமடைந்துள்ளது. ஓர் ஏக்கருக்கு ரூ.15,000 முதல் ரூ.20,000 வரை செலவு செய்து பயிரிட்டுள்ளோம். இப்போது 3 அடிக்கு மேல் தண்ணீர் தேங்கி நிற்பதால் இவை முற்றிலும் சேதம் அடைந்துவிடும். இதற்காக இழப்பீடு தருவதுடன், தோட்டங்களுக்குள் தேங்கி நிற்கும் மணலை அள்ளவும் பொதுப்பணித்துறை ஏற்பாடு செய்ய வேண்டும் என்றார்.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

## சொட்டு நீர் பாசனத்துக்கு 100 சதம் மானியம்

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 17,2012,01:46 IST

கருத்தை பதிவு செய்ய

மேட்டூர்: விவசாயிகள் சொட்டு நீர் பாசனம் செய்வதற்காக, அரசு, 100 சதவீத மானியம் வழங்குகிறது. சேலம் மாவட்டத்தில், 100 சதவீத மானியத்தில் சொட்டுநீர் பாசனம் அமைக்க விவசாயிகள் ஆர்வமில்லாமல் இருப்பது தோட்டக்கலை அலுவலர்களை வேதனையில் ஆழ்த்தியுள்ளது.

தமிழகத்தில் நிலத்தடி நீர்மட்டம் குறைந்து கொண்டே வருகிறது. விவசாயிகள் தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும் என்பதற்காக சொட்டு நீர் பாசன திட்டத்தை அரசு தீவிரமாக செயல்படுத்தி வருகிறது. தற்போது தோட்டக்கலைதுறை சார்பில், 5 ஏக்கருக்கு உள்பட்ட சிறு,

குறு விவசாயிகளுக்கு, ஒரு ஏக்கரில் சொட்டுநீர் பாசனம் அமைக்க அரசு, 100 சதவீதம் மானியம் தருகிறது.

சேலம் மாவட்டத்தில், 20 வட்டாரம் உள்ளது. 2011-12 நிதியாண்டில், சேலம் மாவட்டத்தில் ஒவ்வொரு வட்டாரத்திலும், 100 முதல், 200 ஏக்கரில், 100 சதவீத மானியத்தில் சொட்டு நீர்பாசனம் அமைக்க தோட்டக்கலைத்துறை சார்பில் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பாக தோட்டக்கலை அலுவலர்கள் சிறு, குறு விவசாயிகளை அணுகி சொட்டு நீர் பாசனம் அமைக்குமாறு அறிவுறுத்தி வருகின்றனர்.

திட்டம் நடைமுறைக்கு வந்து சில மாதங்கள் ஆகிய நிலையில், சேலம் மாவட்டத்தில் பெரும்பாலான வட்டாரங்களில் மானியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தியும், விவசாயிகள் சொட்டுநீர்பாசனம் அமைக்க ஆர்வம் காட்டாமல் உள்ளனர். இதுகுறித்து தோட்டக்கலைத்துறை அலுவலர் ஒருவர் கூறியதாவது:

சொட்டுநீர் பாசனம் அமைக்க தேர்வு செய்யப்படும் பயனாளிகளுக்கு அரசு, 100 சதவீத மானியம் வழங்கிறது. இதனால், விவசாயிகள் எவ்வித செலவும் செய்யாமல் தங்கள் நிலத்தில் சொட்டுநீர் பாசனம் அமைக்கலாம்.

சேலம் மாவட்டத்தில் கொளத்தூர், அயோத்தியாபட்டணம், பெத்தநாயக்கன்பாளையம், தலைவாசல், கெங்கவல்லி வட்டாரங்களில் மட்டுமே சொட்டுநீர் பாசனத்துக்கு விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர். இந்த வட்டாரங்களில் நடப்பாண்டில், 100 ஏக்கருக்கு மேல் சொட்டு நீர் பாசனம் அமைக்க மனு கொடுத்து விட்டனர்.

ஆனால், தாரமங்கலம், மேச்சேரி, நங்கவள்ளி உள்பட சில வட்டாரங்களில் சொட்டு நீர் பாசனம் அமைக்க விவசாயிகள் ஆர்வம் காட்டவில்லை. இதுவரை, 50 ஏக்கருக்கு மட்டுமே சொட்டு நீர் பாசனம் அமைக்க விவசாயிகள் விருப்பமனு கொடுத்துள்ளனர். இதனால், தோட்டக்கலை அலுவலர்கள், 100 சதவீதம் மானியத்தில் சொட்டுநீர் பாசனம் அமைக்கும் விவசாயிகளை வலைவீசி தேடி வருகின்றனர்.

இவ்வாறு அவர் கூறினார்.

**வெள்ளாடு, கறவை மாடுகளுக்கு நோய் தடுப்பூசி: கலெக்டர் தகவல்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 17,2012,01:29 IST

கருத்தை பதிவு செய்ய

நாமக்கல்: "நாமக்கல் மாவட்டத்தில் வழங்கப்பட்ட இலவச வெள்ளாடு, கறவை மாடுகளுக்கு, நாளை கோமாரி நோய்த் தடுப்பூசி மற்றும் குடற்புழு நீக்க மருந்தும் வழங்கப்பட உள்ளது' என, மாவட்ட கலெக்டர் குமரகுருபரன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கை:
வறுமைக் கோட்டுக்கு கீழ் உள்ள பெண்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் வகையில், ஒரு பயனாளிக்கு நான்கு வெள்ளாடுகள், செம்மறி ஆடுகள் வீதம் இந்தாண்டு, 31 மாவட்டங்களிலும் ஒரு லட்சம் பயனாளிகளுக்கு நான்கு லட்சம் வெள்ளாடு வழங்கப்படுகிறது.
அதுபோல், ஒரு பயனாளிக்கு ஒரு கறவை பசு வீதம், 12 ஆயிரம் கறவை மாடுகள், 21 மாவட்டங்களில் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நாமக்கல் மாவட்டத்தில், 42 கிராமங்களில், 2,133 வெள்ளாடுகள் மற்றும் இரண்டு கிரமங்களில், 100 கறவை பசுக்கள் வழங்கப்பட்டுள்ளன.
இத்திட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள கால்நடைகளை பாதுகாக்கும் வகையில், கால்நடை உதவி டாக்டர்கள், வாரந்தோறும் சென்று உடல் நலம் பரிசோதனை செய்து வருகின்றனர். பயனாளிகளுக்கு கால்நடைகளை நல்ல முறையில் பராமரிப்பது குறித்த பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகிறது. மேலும், இத்திட்டத்தின் கீழ், தமிழகம் முழவதும் வழங்கப்பட்ட கறவை மாடுகளை, கோமாரி நோயிலிருந்து காக்கும் வகையில், நாளை கோமாரி நோய் தடுப்பூசி, வெள்ளாடு, செம்மறி ஆடுகள் உடல் எடை அதிகரிக்கவும், நோய் எதிர்ப்பு திறன் அதிகரிக்கவும் குடற்புழு நீக்க மருந்தும் வழங்கப்பட உள்ளது.

**கொப்பரை விலை மேலும் ரூ.2 சரிவு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 17,2012,01:34 IST

கருத்தை பதிவு செய்ய
கோபிசெட்டிபாளையம்: கொப்பரை தேங்காய் தொடர்ந்து வீழ்ச்சி அடைவதால் தென்னை விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். நேற்றைய மார்க்கெட்டில் கொப்பரை விலை கிலோவுக்கு இரண்டு ரூபாய் மேலும் வீழ்ச்சியடைந்தது.
கோபி அரக்கன்கோட்டை, தடப்பள்ளி, கீழ்பவானி, குண்டேரிப்பள்ளம் அணைப் பாசனம், பெரும்பள்ளம் அணைப் பாசனம் ஆகிய பகுதிகளில், அதிகளவில் நெல் பயிரிடப்படுகிறது. நெல்லுக்கு அடுத்தபடியாக கரும்பு, வாழை மற்றும் மஞ்சள் பயிர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து சாகுபடி செய்யப்படுகிறது.
மூன்று ஆண்டுகளாக விவசாய கூலியாட்கள் பற்றாக்குறை காரணமாக தோட்டக்கலை பயிர்களான காய்கறிகளை விவசாயிகள் பயிரிடத் துவங்கினர். கத்தரிக்காய், வெண்டை, தக்காளி, பாகற்காய், காலிஃபிளவர், புடலை, சின்ன வெங்காயம், பூசணி வகைகள், முள்ளங்கி, கீரை வகைகள் உள்ளிட்ட பயிர்கள் பயிரிடப்படுகிறது. பயிர் வகைகளுக்கு அடுத்தபடியாக தென்னை அதிகளவில் வளர்க்கப்படுகிறது.

தென்னை அறுவடை செய்து, கொப்பரையாக தேங்காயாக மாற்றப்படுகிறது. கோபி ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் விற்பனைக்காக விவசாயிகள் கொண்டு வருகின்றனர். சென்ற ஆண்டில் ஒரு கிலோ, 72.29 முதல் 68.27 ரூபாய்க்கு விற்கப்பட்டது. நடப்பாண்டு துவக்கத்தில் ஒரு கிலோ, 50 ரூபாய் முதல் 47 ரூபாய் வரை விற்கப்பட்டது. தேங்காய் எண்ணெய் விலை தொடர்ந்து வீழ்ச்சியடைந்ததால், கொப்பரை விலை தொடர்ந்து வீழ்ச்சியடைந்தது.

நேற்றைய நிலவரப்படி ஒரு கிலோ, 39.75 ரூபாய் முதல் 36.13 ரூபாய்க்கு விற்கப்பட்டது. கொப்பரை விலை வீழ்ச்சியால் தென்னை விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். தென்னை விவசாயி ஒருவர் கூறியதாவது:

தமிழகத்தில் இருந்து கேரளாவுக்கு அதிகளவில் தேங்காய் எண்ணெய் அனுப்பப்படுகிறது. 1,130 ரூபாய்க்கு விற்கப்பட்ட தேங்காய் எண்ணெய் 15 கிலோ, 900 ரூபாயாக வீழ்ச்சியடைந்துள்ளது. எண்ணெய் விலை வீழ்ச்சியால் கொப்பரை விலை வீழ்ச்சியடைக்கிறது.

சென்றாண்டில், 72 ரூபாய் வரை கொப்பரை விற்பனையானது. நடப்பாண்டு கொப்பரை விலை கிலோ, 39 ரூபாய்க்கு விற்கப்படுவதால், விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. கொப்பரை விலை உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**கொப்பரை விலை மேலும் ரூ.2 சரிவு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 17,2012,01:34 IST

கருத்தை பதிவு செய்ய

கோபிசெட்டிபாளையம்: கொப்பரை தேங்காய் தொடர்ந்து வீழ்ச்சி அடைவதால் தென்னை விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். நேற்றைய மார்க்கெட்டில் கொப்பரை விலை கிலோவுக்கு இரண்டு ரூபாய் மேலும் வீழ்ச்சியடைந்தது.

கோபி அரக்கன்கோட்டை, தடப்பள்ளி, கீழ்பவானி, குண்டேரிப்பள்ளம் அணைப் பாசனம், பெரும்பள்ளம் அணைப் பாசனம் ஆகிய பகுதிகளில், அதிகளவில் நெல் பயிரிடப்படுகிறது. நெல்லுக்கு அடுத்தபடியாக கரும்பு, வாழை மற்றும் மஞ்சள் பயிர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து சாகுபடி செய்யப்படுகிறது.

மூன்று ஆண்டுகளாக விவசாய கூலியாட்கள் பற்றாக்குறை காரணமாக தோட்டக்கலை பயிர்களான காய்கறிகளை விவசாயிகள் பயிரிடத் துவங்கினர். கத்தரிக்காய், வெண்டை, தக்காளி, பாகற்காய், காலிஃப்ளவர், புடலை, சின்ன வெங்காயம், பூசணி வகைகள், முள்ளங்கி, கீரை வகைகள் உள்ளிட்ட பயிர்கள் பயிரிடப்படுகிறது. பயிர் வகைகளுக்கு அடுத்தபடியாக தென்னை அதிகளவில் வளர்க்கப்படுகிறது.

தென்னை அறுவடை செய்து, கொப்பரையாக தேங்காயாக மாற்றப்படுகிறது. கோபி

ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் விற்பனைக்காக விவசாயிகள் கொண்டு வருகின்றனர். சென்ற ஆண்டில் ஒரு கிலோ, 72.29 முதல் 68.27 ரூபாய்க்கு விற்கப்பட்டது. நடப்பாண்டு துவக்கத்தில் ஒரு கிலோ, 50 ரூபாய் முதல் 47 ரூபாய் வரை விற்கப்பட்டது. தேங்காய் எண்ணெய் விலை தொடர்ந்து வீழ்ச்சியடைந்ததால், கொப்பரை விலை தொடர்ந்து வீழ்ச்சியடைந்தது.

நேற்றைய நிலவரப்படி ஒரு கிலோ, 39.75 ரூபாய் முதல் 36.13 ரூபாய்க்கு விற்கப்பட்டது. கொப்பரை விலை வீழ்ச்சியால் தென்னை விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். தென்னை விவசாயி ஒருவர் கூறியதாவது:

தமிழகத்தில் இருந்து கேரளாவுக்கு அதிகளவில் தேங்காய் எண்ணெய் அனுப்பப்படுகிறது. 1,130 ரூபாய்க்கு விற்கப்பட்ட தேங்காய் எண்ணெய் 15 கிலோ, 900 ரூபாயாக வீழ்ச்சியடைந்துள்ளது. எண்ணெய் விலை வீழ்ச்சியால் கொப்பரை விலை வீழ்ச்சியடைக்கிறது.

சென்றாண்டில், 72 ரூபாய் வரை கொப்பரை விற்பனையானது. நடப்பாண்டு கொப்பரை விலை கிலோ, 39 ரூபாய்க்கு விற்கப்படுவதால், விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. கொப்பரை விலை உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**விவசாயிகள்குறைதீர் கூட்டம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 17,2012,04:42 IST

கருத்தை பதிவு செய்ய

தஞ்சாவூர்: தஞ்சாவூர் கலெக்டர் அலுவலக பிரதான கட்டிட கூட்ட அறை முதல் மாடியில், விவசாயிகள் குறைதீர்க்கூட்டம் இன்று நடக்கிறது. காலை 10 மணிக்கு நடக்கும் கூட்டத்துக்கு, கலெக்டர் பாஸ்கரன் தலைமை வகிக்கிறார்.இதில், ""விவசாயம், நீர்ப்பாசனம், கால்நடை, கூட்டுறவு, மின்சாரம், வேளாண்மை பொறியியல்துறை, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம், தோட்டக்கலைத்துறை போன்ற விவசாயம் சார்ந்த கருத்துக்களை விவசாயிகள் தெரிவிக்கலாம்'', என, கலெக்டர் அலுவலக செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பயிர் காப்பீட்டு திட்டத்தில் விவசாயிகளுக்கு சலுகை**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 16,2012,22:58 IST

கருத்தை பதிவு செய்ய

தேனி :பயிர் காப்பீட்டு திட்டத்தில் விவசாயிகளுக்கு கூடுதல் சலுகை வழங்கப்பட்டுள்ளது. பயிர் காப்பீட்டு திட்டத்தில் நெல், கம்பு, சோளம், மக்காச்சோளம், ராகி, உளுந்து, பச்சை பயிறு,

துவரை, நிலக்கடலை, எள், கரும்பு, பருத்தி, உருளைக்கிழங்கு, மிளகாய், வெங்காயம், இஞ்சி, மஞ்சள், மரவள்ளிக்கிழங்கு, வாழை ஆகிய பயிர்களை காப்பீடு செய்யலாம்.

பயிர்க்கடன் பெறுவோர், நகைக்கடன் பெறுவோர் மட்டுமின்றி விருப்பத்தின் அடிப்படையில் பயன் பெறலாம். விவசாயிகள் தங்கள் விருப்பத்தின் பெயரில் கூடுதலாக காப்பீட்டு தொகை செலுத்தி சராசரி மகசூ லின் 150 சதவீதம் மதிப்பு வரை காப்பீடு செய்து கூடுதல் பலன் பெறலாம். இத்திட்டத்தின் கீழ் குறிப்பிட்ட நோய் அல்லது பரவலான பாதிப்புகள் காரணமாக ஒரு பகுதியில் ஒரு விவசாயிக்கு கணிக்கப்பட்ட மகசூல், உத்திரவாத மகசூலை காட்டிலும் குறைவாக இருந்தால் அப்பயிரை சாகுபடி செய்த அனைத்து விவசாயிகளுக்கும் இழப்பு ஏற்பட்டதாக கருதப்பட்டு நிதியுதவி வழங்கப்படும்.